ஸ்ரீ திரிபுரஸுந்தரீ ஸமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

பிரமேயநிச்சயத்திற்கு பிரமாண நிச்சயம் காரணமாகும். பிரமாணமில்லாவிடில் எந்தப்பிரமேயந்தான் நிலைக்கும். ஆகவே பிரமாணங்களைப்பற்றி முதலாவது தீர்மானித்துக்கொள்ளவேண்டும். அதில் அனேக விவாதங்கள் உண்டு. பிரத்தியக்ஷமொன்றே போதுமென்று பிராகிருத ஜனங்கள் நினைப்பதோடு சார்வாகரென்ற நாஸ்திக் மதஸ்தரும் கூறுகின்றனர். அது மாத்திரம் போதாது. ஆனல் பிரத்தியக்ஷம் அனுமானம் இரண்டையும் பிரமாணமாகக்கொள்ளவேண்டுமென்று தார்க்கிகர்களுக்குள் ஒரு வகுப்பாரான காணாதமதஸ்தர்களும், பௌத்தர்களும் கூறுகின்றனர்கள். சப்தப்பிரமாணத்தையும் அவைகளோடு சேர்த்துக்கொண்டு மூன்று பிரமாணங்களை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று ஸாங்கிய மதஸ்தர் கூறுகின்றனர். பிரத்தியக்ஷம், அனுமானம், உபமானம், சப்தம் ஆகிய நான்குப் பிரமாணங்களை அங்கீகரிக்கவேண்டுமென்று நையாயிகர் கூறுவர். அர்த்தாபத்தி என்றதோடு சேர்த்து ஐந்துப்பிரமாணங்கள் வேண்டுமென்பர். பிராபாகாரமஸ்தர்— அனுலம்பதியைச் சேர்த்து ஆறு பிரமாணங்களை ஒப்புக்கொள்ளவேண்டுமெனபாட்டர்களும்வேதாந்திகளும்கூறுவார்கள். ஐதிஹ்யாதிகளையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்றுவேறுசிலர். இவ்வாறுவாதிகளின் விவாதம் அனேகவிதமாகப் பிரமாண விஷயத்தில் காணப்படுகின்றது. ஆனதால் இதை விசாரித்துத் தீர்மானித்துப் பிரமாண நிச்சயம் செய்துகொள்ளவேண்டும். அப்படித் தீர்மானிக்கப்பட்ட பிரமாண மூலமாகப் பிரமேயங்களை விசாரித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். பிரமாணங்களைக்கொண்டு விசாரிக்காமல் இஷ்டம்போல் எதையாவது தீர்மானித்துக்கொண்டு அதற்குத் தன் மனதில் தோன்றியதெல்லாம் ஸாதனமென்றும், கண்டபடி நடந்துவருவதாலேயே இஷ்டப்பட்டவையெல்லாம் கிடைத்துவிடுமென்றும் நினைப்பது விபரீதஞானமேயாகும். விபரீதஞானத்தால் உண்மையான பலனையடையமுடியாதென்பது மாத்திரமல்ல; விபரீதமான கெடுதலேயுண்டாகும். ஸம்சயத்தால் நம்பிக்கை இல்லாதவனுக்கு ஐஹிக பலனும் கிடைக்காது. ஆமுஷ்மிகபலனும் கிடைக்காது. ஆகையால் பிரமாணங்களிலாவது பிரமேயங்களிலாவதுஸம்சயத்தையடையாமலும், விபரீதஞானத்தையடையாமலும் நிச்சயமான அறிவையடைந்து அதனல் பிரமேயதத்துவங்களை நன்ருய் அறிந்து அவைகளின்படி நடந்து யாவரும் க்ஷேமத்தை அடைவார்களாக,

பத்திராதிபர்.

உ

ஆர்யதர்மம்.

பிரமோத-௵ ஆனி-௴ கஉஉ

லோகாந்தரம்.

தீர்க்காயுஸ்ஸாக நெடுநாள் ஜீவித்திருக்கவேண்டுமென்ற ஆசை பொதுவாக ஸர்வப்பிராணிகளுக்கும் ஸஹஜமாக இருந்து கொண்டிருக்கிறது. அதற்கு அனுகூலமான அதிருஷ்டஸாதனங்களாகிய ஆயுஷ்யகார்யங்கள் பல சுருதிஸ்மிருதிகளில் விதிக்கப்படுகின்றன. வைத்யநூல்களிலும் சுருக்கமாய் போதிக்கப்படுகின்றன. பெரும்பாலும் திருஷ்டஸாதனங்கள் அவைகளில் கூறப்படுகின்றன. அந்த ஸாதனங்களையனுஷ்டித்து தீர்க்காயுஸ் யோகமுள்ளவன் அடுத்தபடி தேடவேண்டியது தனமேயாகும். தனமில்லாமல் தீர்க்காயுஸ்ஸாயிருப்பதைவிட வேறு பாபமில்லை. இது பாபத்திலும் கொடிய பாபமாம். ஆதலால் தனக்கும் சுற்றத்தாருக்கும் போஷணைக்குப் போதுமான பொருளைத்தேட முயலவேண்டும். கிருஷி, பசுபோஷணம், வியாபாரம், ராஜஸேவை முதலியன தனம்தேடச் சாதனமென்பது பிரஸித்தமாயுள்ளது. ஆனால் இவைகளும் இவைபோன்ற மற்றவைகளும் சிஷ்டர்கள் ஸம்மதிக்கின்ற பிரகாரமாகத்தான் ஆசிரயிக்கப்படவேண்டும். சிஷ்டர்கள் இஷ்டப்படாத காரியங்கள் எவ்வளவு பொருட்குவியலை விளைவிப்பனவாயினும் அவைகளையனுஷ்டிக்கக்கூடாது. சாஸ்திரஸம்மதமாயும் சிஷ்டஸம்மதமாயுமாகாதது பாபமேயாகும். பாபத்திற்காளாய்விட்டால் பரலோகசுகம் கிடைக்காது. மிகவும் அற்பமாகிய இவ்விடத்திய சிற்றின்பத்திற்காசைப்பட்டு பரலோகத்தில் பெறக்கிடக்கும் பேரின்பத்தையிழந்துவிடுவது குழந்தைத்தனமாகும். ஆகையால் சாஸ்திரவிரோதமில்லாத சிஷ்டர் ஸம்மதித்த எவ்வழியிலேனும் சிரமப்பட்டாவது வேண்டிய பொருள் தேடிக்கொள்ளவேண்டும். இப்படி சிரமப்பட்டுத் தேடிய தனத்தைத் தெருவிலிறைத்துவிடாமலும் அகார்யங்களில் செலவிட்டு

பாபத்திற்காளாகாமலும் பரலோகஸாதகமாக சுருதி ஸ்மிருதிகளால் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட நல்ல கார்யங்களையே செய்து இம்மையிலும் ஸுகமாயிருந்து லோகாந்தரங்களிலும் ஸௌக்கியத்தை எல்லோரும் அடையவேண்டும். ஆகவே பரலோகவிருப்பமெல்லோருக்கும் இருக்கவேண்டும். இதைப்பற்றி சரகஸம்ஹிதை ஸூத்திரஸ்தானம் 11-வது அத்தியாயத்தில் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதை இங்கு எடுத்துரைப்பாம்.

" अथ तृतीयां परलोकैषणामापद्येत "

"இனி மூன்றுவதான பரலோகைஷணையையடையவேண்டும். (இதற்குக்கீழ் பிராணைஷணை, தனைஷணை என்ற இரண்டையும் பற்றி கூறியிருப்பதால் பரலோகைஷணை மூன்றுவதாகக் குறிப்பிடப்பட்டது. " **संशयश्चात्र** " இவ்விஷயத்தில் ஸம்சயமுண்டாகின்றது '**कथम्**' எப்படியெனில் '**भविष्यामळतश्च्युतानवेति**' இந்த சரீரத்திலிருந்து பிரிந்தபின் இருக்கப்போகிறேமா? இருக்கப்போகிறதில்லையா என்று. " **कुत: पुनस्संशय इति**" எதனுல் ஸம்சயமெனில் **उच्यते** கூறப்படுகிறது. வாதிகளின் விவாதங்களிலிருந்து ஸம்சயமுண்டாகின்றதாம். அதாவது—

" सन्तिह्येके प्रत्यक्षपराः परोक्षत्वात्पुनर्भवस्य नास्तिक्यमाश्रिताः "

பிரத்தியக்ஷமொன்றையே பிரமாணமாகக்கொண்ட சிலர் (நாஸ்திகர் அதாவது ஜன்மாந்தரமில்லை, கர்மபலனில்லை, அதையனுபவிக்க பரலோகம் செல்லுமாத்துமாவுமில்லை, பிரத்தியக்ஷப்பிரமாணம் ஒன்றினுல்மட்டும் தெரிந்துகொள்ளக்கூடியவைகள்தான் இருக்கின்றன என்று கூறித்திரிபவர்) பிரத்தியக்ஷமாகப் பரலோகத்தை தெரிந்துகொள்ளமுடியாமையால் அது பரோக்ஷமாயிருப்பது பற்றி இல்லையென்ற கக்ஷியை ஆசிரயித்திருக்கிறார்கள்

" सन्ति चापरे येत्वागम प्रत्ययादेव पुनर्भवमिछन्ति "

"சுருதி ஸ்மிருதி முதலிய பிரமாணங்களை நம்பி லோகாந்தரத்தை அங்கீகரிப்போரும் பலரிருக்கின்றார்கள். இவ்விதமாக வாதிகளுடைய விவாதமிருப்பதால் ஸம்சயமுண்டாகின்றது.

श्रुतिभेदाच्च— " मातरं पितरञ्चैके मन्यन्ते जन्यकारणं ।
स्वभावं परनिर्माणं यदृछयां चापरे जनाः ॥

इत्यतस्संशयः— किंनुख ल्वस्ति पुनर्भवो नवेति ॥

இன்னும் சில வாதிகளின் கிரந்தங்களில் எழுதப்பட்ட வசனங்கள் பலவாறாகக் காணப்படுகின்றன. அதாவது சிலர் தாயார், தகப்பனார் இவர்கள்தான் ஜன்மகாரணமென்று நினைக்கிறார்கள். வேறு ஆத்மாவென்பது கிடையாதென்பது அவர்களது கருத்தாம். வேறு சிலர் சரீரவடிவமாய்ப் பரிணமித்த ஐம்பூதங்களினின்று அறிவென்றதோர் குணமுண்டாகின்றது. தனித்தனியே ஐம்பூதங்களில் அறிவென்பது புலப்பட்டால் அவைகளின் சேர்க்கையிலும் தோன்றுவதாகக் கூறலாம். தனித்தனியே ஒவ்வொரு எள்ளினுள்ளும் கொஞ்சம்கொஞ்சமாயிருக்கிற எண்ணைத்துளிகளே மூட்டைஎள்ளைப்போட்டு செக்கிலரைக்கும்பொழுது அந்த எண்ணை அதிகமாகக்காணப்படுகின்றது. கொஞ்சங்கூட எண்ணையில்லாத மணலை எவ்வளவு மூட்டை போட்டு அரைத்தாலும் எண்ணை புலப்படுமா? இதுபோல் பூதங்களில் ஒவ்வொன்றிலும் அறிவிருப்பதாகக் காணப்படவில்லையே? எவ்வாறு அவைகளின் சேர்க்கையில் காணப்படுவதாகக் கூறுவது பொருந்துமென்றால் ஸ்வபாவவாதிகள் கூறுகின்றார்கள். தான்னியங்களினின்றும் அனேக ஔஷதிகளினின்றும் வெல்லம் தேன் இவைகளினின்றும் ஸுரை (ஓர்வித மத்தியம் அதாவது கள்) என்பது உண்டாக்கப்படுகின்றது. அதில் மதசக்தி காணப்படுகிறது. அதற்குக் காரணங்களாகிய தான்யாதிகளில் தனித்தனியே அது காணப்படுவதில்லை. ஆயினும் அவைகளின் சேர்க்கையில் காணப்படுகின்றது. அது போல் ஐம்பூதங்களில்தனித்தனியே காணப்படாவிடினும் அவைகளின் சரீரவடிவமான சேர்க்கையில் அறிவு காணப்படுவதில் எவ்வித விரோதமுமில்லை. பூதங்களின் ஸ்வபாவமிது என்று ஸ்வபாவவாதிகள் கூறுகின்றார்கள். அறிவுக்கு ஆசிரயமாக ஆத்மாவென்பது ஒன்று. அதிகமாக அங்கீகரிக்கவேண்டியதில்லையெனக் கருத்து. வேறு சிலர்— பரமேச்வரனுடைய ஸிருஷ்டியே ஜன்மகாரணமென்கிறார். காரணமிருந்துதான் கார்யமுண்டாகவேண்டுமென்ற நியமம் கிடையாது. நேர்ந்தால் இருக்கட்டும், நேராவிடில் இயற்கையாகவே கார்யங்கள் உண்டாய்விடுகின்றன. அதற்காக ஆத்மாவென்று ஒருவன் வேண்டாமென்று யதிருச்சாவாதிகள் கூறுகின்றனர். இவ்வாறு பலர் பலவிதமாகக் கிரந்தங்களிலெழுதிவைத்திருப்பதாகக் கேழ்விப்படுவதிலிருந்தும் மறு

பிறப்பு உண்டா அல்லது இல்லையாவென்று ஸம்சயமுண்டாகின்றது இவ்விதமாகப் பூர்வபக்ஷத்தைக் காட்டிவிட்டு ஸித்தாந்தம் கூறப்படுகின்றது.

"तत्र बुद्धिमान्नास्तिक्य बुद्धिं जह्यात् । विचिकित्सांच ॥

அதில் சிறந்த புத்தியுள்ளவன் மறுபிறப்பில்லை, லோகாந்தரமில்லை என்ற விபரீதஞானமாகிய நாஸ்திகபுத்தியை விட்டுத்தொலைக்க வேண்டும். விபரீதஞானம் தர்மானுஷ்டானத்திற்கு விரோதமாயிருப்பதுபோல் கொஞ்சமாவது ஸம்சயமிருந்தாலும் நம்பிக்கையுடன் பரலோகஸாதனங்களில் பிரவிருத்தியுண்டாகமாட்டாது. அதனால் ஸம்சயத்தையும் விட்டுவிடவேண்டும். 'कस्मात्' வாதிகளின் விவாதம் கீழ்காட்டியவாறிருக்கும்பொழுது இவ்விரண்டையும் எப்படி விடமுடியுமென்றால் கூறுவாம்—

प्रत्यक्षंह्यल्पं अनल्पमप्रत्यक्षमस्ति। यत्-आगमानुमानयुक्तिभिरुपलभ्यते ॥

விஷயங்களைத் தெரிந்துகொள்ளப் பிரத்தியக்ஷமொன்றேதான் பிரமாணமென்று சொல்லும் நாஸ்திகர்களைக் கேட்போம். பிரத்தியக்ஷத்தால் தெரிந்துகொள்ளக்கூடியது ஸ்வல்ப்பம்தானுளது. அதைத்தவிர வேறு தெரிந்துகொள்ளக்கூடிய வஸ்துக்களே இல்லையென்று சொல்லமுடியாது. பிரத்தியக்ஷத்தில் காணக்கூடாத வஸ்துக்கள்தான் அதிகங்களாயிருக்கின்றன. அத்தகைய வஸ்துக்களிருக்கின்றனவென்று எப்படித் தெரிகின்றதென்றால் அனுமானம் யுக்தி ஆகமப்பிரமாணமெனப்படும் சப்தப்பிரமாணம் முதலியவைகளால் தெரிகின்றது. அனுமானம் முதலியவைகளும் பிரமாணங்கள்தானோவென்றால் பிரத்தியக்ஷம் பிரமாணமோவென்று திருப்பிக்கேட்டால் நாஸ்திகர் என்னசொல்லுவார்? பிரத்யக்ஷப்பிரமாணமெனப்படும் இந்திரியங்கள் உண்மையான அறிவையுண்டுபண்ணுவதால் பிரமாணமென்பதில் என்ன ஸந்தேகம் என்று சொல்லுவாரானால் அப்பொழுது "உண்மையான அறிவையுண்டுபண்ணக்கூடியது எதுவோ அது பிரமாணமெனப்படும்" என்ற பிரமாணலக்ஷணம் அனுமானம் ஆகமம் முதலியவைகளிலிருப்பதால் அவைகளையும் பிரமாணமென்றே அங்கீகரிக்கவேண்டியதுதான். உதாரணமாகப் பார்ப்போம்.

यैरेव तावदिन्द्रियैः प्रत्यक्षमुपलभ्यते, तान्येव सन्तिचाप्रत्यक्षाणि ।

பிரத்தியக்ஷப்பிரமாணமெனப்படும் இந்திரியங்கள் இருக்கின்றன வென்பதற்கு என்ன பிரமாணம்? பிரத்தியக்ஷமென்று சொல்ல முடியாது. இந்திரியங்கள் பிரத்தியக்ஷங்களாகக்கூடியவைகள் என்று எவருமொப்புக்கொள்ளவில்லை. நாஸ்திகர் ஒப்புக்கொள்ளுகிறார்களேயென்றால் கோளகங்களைக்கண்டு இந்திரியங்களெனப் பிரமித்து அங்ஙனமொப்புக்கொள்ளுகிறார்களேயன்றி வேறல்ல. முருக்குப்போல் சுழண்டு காணப்படும் கருவியே சுரோத்திரேந்திரியமல்ல. அந்தக்கருவி நன்றாயிருப்பதாகக் காணப்படுவர் செவிடராயிருப்பதைக்காண்கிறோமல்லவா? அதனால் சுரேத்திரேந்திரியமென்பது காணப்படும் கோளகத்தைவிட வேறானது என்று ஸ்புடமாகின்றது. அன்றியும் துவக் என்ற இந்திரியம் மேலாகக் காணப்படும் தோலல்ல. தோலே துவக் என்ற இந்திரியமென்றால் மரத்துப்போனவிடத்திலுள்ளதோலில் குளிர்ச்சி உஷ்ணம் என்ற உணர்ச்சி உண்டாவதில்லை. ஆகவே தோலைவிட வேறாயுள்ளதே துவக் என்ற இந்திரியமாகும் இவைபோலவே மற்ற இந்திரியங்களும் அந்தந்தக்கோளகங்களைவிட வேறாயுள்ளனவென்று கண்டுகொள்ளவேண்டும். ஆகையால் இந்திரியங்கள் பிரத்தியக்ஷமாகக் காணக்கூடவில்லை, பிரத்தியக்ஷப்பிரமாணத்தால் தெரிந்துகொள்ளப்படாமையால் இல்லையென்றும் சொல்லமுடியவில்லை. எந்த இந்திரியங்களால் கடம், படம் முதலிய விஷயங்கள் பிரத்தியக்ஷமாக அறியப்படுகின்றனவோ அந்த இந்திரியங்களே அப்பிரத்தியக்ஷங்களாக இருக்கின்றன. அவைகளையறிய வேறு பிரமாணத்தையவசியமங்கீகரிக்கவேண்டியதாகிறது. அன்றியும் பிரத்தியக்ஷ பிரமாணமே தன் விஷயங்களைப் பூராவும் தெரிவிக்கத்தக்க சக்தியுள்ளதாயில்லை. அந்தவிடங்களில் அவைகளை வேறு பிரமாணங்கொண்டு தெரிந்துகொள்ளவேண்டியதாகிறது. அதாவது—

"सतां च रूपाणामति सान्निकर्षात्, अतिविप्रकर्षात्, आवरणात्, करणदौर्बल्यात्, मनोऽनवस्थानात्, समानाभिहारात्, अभिभवात्, अतिसौक्ष्म्याच्च प्रत्यक्षानुपलब्धिः"

இருப்பதாகவே நிச்சயிக்கக்கூடிய வஸ்துக்கள் காணமுடியாமற் போய்விடுகின்றன. உதாரணமாக மைக்கூண்டில் வைத்திருக்கும் மை கண்ணால் காணக்கூடியதே. அதைக் கண்ணிலிட்டுவிட்டால் அந்தக் கண்ணாலேயே காணமுடிகிறதில்லை, அதேன்? அதிக ஸமீ

பத்திலிருப்பதே அதற்குக் காரணம். கொஞ்சம் விலகியிருந்த போது காணப்பட்ட மை கண்ணிலேயே அதிஸமீபமானவிடத்தில் வந்ததால் காணப்படுவதில்லை. ஆனால் ஒருவன் சொல்வதிலிருந்தோ கையில் ஈஷிக்கொண்டதால் ஏற்பட்ட அனுமானத்திலிருந்தோ தெரிந்துகொள்ளப்படுகிறது. இதுபோல் அதிகதூரம் விலகிவிட்டாலுமிருக்கின்ற வஸ்துவே காணப்படுவதில்லை. உதாரணமாக ஆகாயத்தில் வெகுதூரம் சென்ற பக்ஷி கண்ணுக்குப் புலப்படுவதில்லை. சுவர் முதலியவைகடால் மறைவு ஏற்படுவதினாலும் காணப்படுவதில்லை. இந்திரியங்களுக்கு வியாதி முதலிய காரணங்களால் சக்தி குறைந்தபோதும் தெரிவதில்லை. அதாவது காமாலைநோய் பிடித்தவனுக்குக்கண்ணின் தோஷத்தால் வெள்ளை வேஷ்டியிலிருக்கும் வெண்ணிறம் புலப்படுவதில்லை. மனது நிலைக்காவிட்டாலும் இருக்கின்ற வஸ்து தெரியமாட்டாது. இது வேறு கவனமுள்ளவனுக்குப் பிரஸித்தமாயுள்ளது. ஸமானஉருவமுள்ள வஸ்துக்களில் சேர்ந்திருந்தாலும் தெரியாது. அதாவது பில்வத்தழைக் கூட்டத்தில் விழுந்துகிடக்கும் விளாஇலை புலப்படாது. அதிக ஒளியுள்ளதினால் ஆக்கிரமிக்கப்பட்டதும் பார்க்கக்கூடியதாகாது. அதாவது ஆகாயத்திலிருக்கின்ற நக்ஷத்திரங்கள் சூர்ய வெளிச்சத்தால் மங்கிப்போவதனால் பகலில் காணப்படுவதில்லை. மிகவும் ஸூக்ஷ்மமாயிருப்பதனாலும் காணமுடியாது. ஒரு சின்ன கிருமி நான்குமுழம் தள்ளிக்கிடக்குமானால் தெரிகிறதல்லையல்லவா? கெட்ட நீராலும், புளிச்ச மோராலும் அணுக்களுக்கும் சிறிதான பூச்சிகள் பிரத்தியக்ஷமாய்க் காணமுடியவில்லை. ஆயினும் வேறு பிரமாணங்களைக்கொண்டு இருப்பதாக ஊஹிக்கப்படுகின்றன. இதுபோன்ற அனேக காரணங்களால் பிரத்தியக்ஷமாய்க் காணக்கூடிய வஸ்துக்களையே வேறு பிரமாணங்கள்மூலமாகத் தெரிந்துகொள்ளுவதிலிருந்து பிரத்தியக்ஷத்திற்கு எட்டாத விஷயங்களையும் அந்தபிரமாணங்களைக்கொண்டு தெரிந்துகொள்ளலாமென்றாகின்றது.

तस्मादपरीक्षितमेतदुच्यते—प्रत्यक्षमेवास्ति, नान्यदस्तीति ।

அதனால் பிரத்தியக்ஷமொன்றுதானுண்டு, மற்றவை கிடையா என்று பரீக்ஷிக்கப்படாமலே கூறப்படுகின்றதேயன்றி பரீக்ஷை செய்து ஆராய்ந்துபார்த்துச் சொன்னதல்ல, ஆகவே அனுமா

ஞகமாதிகளால் மறுபிறப்புண்டென்றே ஏற்படுகின்றது. மறு பிறப்புண்டானல் அதையடைந்து லோகாந்தரம் செல்லக்கூடிய ஆத்மாவுமுண்டு. அதற்கு ஸாதனங்களாகிய புண்யபாபாதிகளு முண்டென்றே நம்பி பாபங்களை விலக்கி புண்ணியங்களையே செய்து யாவரும் க்ஷேமத்தையேயடைவாராக. சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீ சந்திரசேகரேந்திர பாடசாலா.

ஆலப்புழா.

திருவாங்கூர் இராஜ்யத்தைச் சேர்ந்த ஆலபுரி என்னும் ஆலப்புழாவில் ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகள் ஸ்ரீஜகத்குரு மஹா ஸன்னிதானம் அனுக்ரஹத்தால் நடந்துவரும் வேதசாஸ்திரபாடசாலையானது ஷெயூர் பெரிய கல்லர் ரோட்டில் வைகம் டாக்டர் ஸ்ரீமான் என். லக்ஷ்மணய்யர் அவர்கள் பங்களாவின் நந்தவனத்தில் தனியாகஅமைத்திருக்கும் கட்டிடத்தில் நடந்துவருகின்றது.

இங்கிலீஷ் பயிலும் மாணவர்களுக்கு காலையில் உபநிஷத்து, ருத்ரம், ஸூக்தங்களும் மாலையில் காவ்யபாடங்களும் நடந்துவருகின்றது. 25மாணவர்கள் சேர்ந்திருக்கின்றார்கள்.

இந்த பாடசாலையில் ஸம்ஸ்கிருதம் மட்டும் படித்து வேறு பள்ளிக்குச் சென்று ஆங்கிலம் படித்துக்கொண்டிருந்த மாணவிகளுக்கு இந்த வைகாசிமுதற்கொண்டு இந்த பாடசாலையிலேயே இங்கிலீஷ், கணக்கு, பூகோளம், தமிழ்,ஸங்கீதம் முதலிய பாடங்கள் தனித்தனி உபாத்தியாயர்களை நியமித்து வேறு பள்ளிக்குப் போகாமல் நமது சிறுமிகளை நிறுத்தி ஸ்ரீசந்திரசேகரேந்திரபாடசாலையிலேயே சேர்த்துவருகின்றார்கள்.

எல்லா பாடங்களும் கிரமமாக நடந்துவருகின்றது. *

ஸ்ரீ ஆசார்யபாதாளின் ஆக்ஞையால் வந்திருக்கும் ஸம்ஸ்கிருதசிரோமணி வித்வான் பிரும்மஸ்ரீ V. ராமஸ்வாமிசாஸ்திரிகளின் போதனமுறை ரொம்பவும் போற்றத்தக்கதே. 1-வது

* இந்த பாடசாலையில் பிரதமாசாரியார் அத்வைத வேதாந்தசிரோமணிபரீக்ஷையில் முதலாவது வகுப்பில் தேறிய பிர்மஸ்ரீ N.V.ராமஸ்வாமி சாஸ்திரியாராவார்.

இரண்டாவது வகுப்பில் ஸம்ஸ்கிருதம் படிக்கும் மாணவிகளால் நடத்தப்படும் வாக்ஸம்பாஷணங்கள் சிசுவிவாகத்தடை மசோதா கண்டனமும் விவாகரத்து சட்டம் கேழ்ப்பது சாஸ்திரவிரோதமென்றும் இந்தியநாகரீகத்திற்குப் பொருத்தமில்லையென்றும் சிறுமிகள் இருகக்ஷிகளாகப் பிரிந்து அமரவாணியில் எளியநடையில் வெகு உருக்கமாக கேழ்ப்போர் மனம் கரையும் வண்ணம் சம்பாஷித்ததைக் கேட்ட எனக்கு நமது பூர்வீகர்களான ஸ்ரீஜபாலை, மைத்ரேயி ஸாவித்ரி முதலிய உத்தமஸ்திரீரத்தினங்களின் சரித்திரம் நினைவுக்குவந்தது.

ஸ்ரீ ஆசாரிய அனுக்ரக ஆக்ஞையை சிரமேற்கொண்டுநடத்திவரும் இவ்வூர் பலவக்கீல்களான ஸ்ரீமான் கிருஷ்ணய்யங்காரவர்கள் ஸ்ரீமான் அனந்தசுப்பிரமணியய்யரவர்கள் ஸ்ரீ. கெ. கேசவய்யரவர்கள் முதலிய உத்தமர்களுக்கு ஸ்ரீஜகதேகவந்தியான ஆசாரிய பாதாளின் அருளமுதம் பொழிக என்று இந்துமதப் பிரசாரத்திற்கென்று வந்திருக்கும் சென்னை ஹிந்துமதப்பிரசாரிணிசபா உதவித்தலைவர் பிரும்மஸ்ரீ காமகோடி ராமகிருஷ்ணசாஸ்திரியார் எழுதுகிறார்.

ஓர் சந்தேஹம்.

ஆசௌசமத்தியில் ச்ராத்தங்கள் வந்தால் ஆசௌசநிவர்த்தி தினத்தில் செய்கிறதென்று அனுபோகத்தில் வந்துகொண்டிருக்கிறது யாவரும் அறிந்த விஷயமே. ஷை ஆசௌச நிவர்த்தி தினத்தில் சூனிய திதியாவது அதிதியாவது பஞ்சாங்கத்தில் போடப்பட்டிருந்தால் அன்று ச்ராத்தம் செய்யலாமா ? செய்யக் கூடாதா ? கூடாதபக்ஷத்தில் மறுபடி எப்பொழுது செய்யவேண்டியது என்கிற சந்தேகத்தை வசனமிருந்தால் வசனத்துடன் ஆர்யதர்மபத்திரிகை வாயிலாகவே தயவு செய்து தெரிவிக்கப் பிரார்த்திக்கிறேன்.

M. கிருஷ்ணஸ்வாமி அய்யர்,
ஸ்ரீமடம், முத்திரைகர்த்தா,
மணலூர்பேட்டை.

சந்தேஹத்திற்கு சமாதானம்.

ஆசௌசமத்தியில் நேர்ந்த சிராத்தத்தை ஆசௌச நிவர்த்தி யாகிறதினத்திலேயே செய்யவேண்டும். அன்று அதிதியாயிருந் தாலும் செய்யவேண்டியதுதான். நிர்ணயஸிந்துவில்—

" आशौचान्तदिनत्वेन निमित्तत्वादित्यर्थः "

"ஆசௌசம்முடிந்ததினமென்று" ஆசௌசநிவர்த்திதினத்தையே நிமித்தமாகச் சொல்லியிருப்பதால், அன்று திதி போட்டிருந்தா லும், அதிதிபோட்டிருந்தாலும், மலமாஸமாயிருந்தாலும், அன்றை தினத்திலேயே ஆசௌசத்தால் நின்றுபோன சிராத்தத்தைச் செய்யவேண்டும். அன்றைக்கும் செய்யமுடியாமல் பெரிய விக்கி னங்கள் நேர்ந்துவிட்டால் அடுத்துவரும் கிருஷ்ண ஏகாதசியிலா வது, அமாவாஸையிலாவது செய்யவேண்டியது. யாதொரு விக்கினமும் நேராமலிருக்கும்பொழுதே அதிதியாயிருக்கிறதே என்றதற்காக மாத்திரம் அன்று செய்யாமலிருக்கக்கூடாது.

" आशौचानन्तरकरणासंभवे दर्शेवा कुर्यादित्यर्थः "

என்று வைத்தியநாததீக்ஷிதீயத்திலும் ஆசௌச நிவர்த்தி தினத் தையே முக்கியமாகக் கூறியிருக்கிறது. அதிலும் செய்ய ஸம்ப விக்காவிடில் அமாவாசையில் செய்யவேண்டியதாகக் கூறப்படு கிறது. ஆசௌச நிவர்த்திதினம் அதிதியாயிருக்குமானால் அன்று செய்யக்கூடாதென்று வசனமில்லே. ஆகையால் ஆசௌசத்தால் நின்று போன சிராத்தத்தை அதன் நிவர்த்தி தினத்திலேயே செய்யவேண்டியது. சிஷ்டாசாரமும் அப்படித்தானிருக்கிறது

(ஒப்பம்) சுப்பிரமணிய சாஸ்திரி.

வயோநிர்ணயம்.

(முன்தொடர்ச்சி)

குடம் முதலிய வஸ்துக்களை உண்டுபண்ணுவதற்குங் கூட இவ்விதமவற்றை ஸிருஷ்டிக்கவேண்டுமென்று முதலிலனுபவம் இல்லாவிட்டால் முடியாதென்றால் தர்மாதர்மங்களைப்பற்றிக்கேட்கவும் வேண்டுமோ? ஆகையால் வேதார்த்தத்தை ஒரே விதமாக எடுத்துக் கூறும் மனுஸ்மிருதி முதலியவைகளுக்கு காலதேசவர்த்தமானத்துக்குத் தகுந்தபடி மாற்றி அர்த்தங் கூறவேண்டுமென்ற நவீனர்களின்கற்பனை துர்புத்தி மூலந்தானென்றுணரவேண்டும்.

அன்றியும் "மகரிஷிகள் காம குரோத மூலமாகவும் ஸ்மிருதி கிரந்தங்களை இயற்றியிருக்கலாமாதலின் அவைகளை தர்மாதர்ம விஷயத்தில் பிரமாணமாக ஒப்புக்கொள்வது ஸரியல்ல. பூர்வ மீமாம்ஸையிலும் விரோதாதிகரணத்தில் இவ்விதமே ஸ்மிருதிகளுக்கெல்லாம் பிராமாண்யமில்லையென்று ஜைமினி பகவானும் ஸித்தாந்தம் செய்திருக்கின்றனர்" என்று இந்நவீனர்களின் மற்றொரு ஆக்ஷேபமும் அஸங்கதமேயாகும். ஏனெனின் அவ் விரோதாதிகரணத்தில் வைதிக மார்க்கத்தை அனுஸரித்துக் கொண்டிருக்கும் ஸ்மிருதிகளுக்கு அப்பிராமாண்யங் கூறவில்லை. ஆனால் கபிலர், புத்தர், முதலிய நாஸ்திகர்களின் வைதிக மார்க்கத்துக்கு முற்றிலும் முரண்பட்டிருக்கும் ஸ்மிருதிகளுக்குத்தான் பிராமாண்யமில்லை என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இவர்கள் இவ்வதிகரணஸித்தாந்த ரஹஸ்யத்தை நன்குணராமல் இவ்வாக்ஷேபஞ் செய்வது முற்றிலும் பிசகேயாகும். இவ்வதிகரணத்துக்கு நாஸ்திகஸ்மிருதிகளுக்குப் பிராமாண்யமில்லையென்ற விஷயத்தில்தான் தாத்பர்யமென்பது மடியிற்கண்ட தந்திரவார்த்திக வசனத்தால் நன்கு விளங்குகின்றது. தந்திரவார்த்திகக் கிரந்தத்தில் சொல்லியிருப்பதாவது—

"வேதவேதாங்கங்களையுணர்ந்து அனுஷ்டிக்கும் மனுமுதலிய சிஷ்டர்களால் பிரமாணமாக அங்கீகரிக்கப்படாததும், நடனமாடும் ஸ்திரீயானவள் தமது சரீரக்கோணலை சட்டை முதலியவற்றால் மறைத்துக்கொள்வதுபோல் தமது ஸ்மிருதிகளிலிருக்கும் பொய்யை மறைத்துக் கொள்ளும்பொருட்டு அஹிம்ஸை, உண்மை பேசுதல் முதலிய சில வைதிககர்மகாரியங்களை சட்டையாகத் தரித்துக்கொண்டிருப்பதும், ஜனங்களைத் தமது சார்பாகத் திருப்புதல், தனலாபம், பூஜை, யசஸ் முதலியவைகளை முக்கியப் பிரயோஜனமாகக்கொண்டதும், வேதப் பிரமாணத்திற்குமுரண்பட்

டும், வேதப்பிரமாணத்தை மூலகாரணமாகவொப்புக்கொள்ளாததும் பார்வைக்குமட்டிலும் மிகவழகாகப் புலப்படக்கூடியதுமாகிய, பிரத்தியக்ஷம், அனுமானம், உபமானம், அர்த்தாபத்தி முதலிய யுக்திவாதங்களையே அஸ்திவாரமாக வைத்துக்கொண்டு எழுதி வைக்கப்பட்டதும், ஸாங்கியன், யோகி, பாஞ்சராத்ரன் பாசுபதன், பௌத்தன் முதலிய நாஸ்திகர்களின் ஆசாரானுஷ்டான முறைகளை அறிவிப்பதும், விஷவைத்யம், ஸ்திரீ முதலியவர்களைத் தனது வசமாக்கிக்கொள்ளுதல், யக்ஷாரக்ஷஸ்ஸுக்களை விலக்குதல், மாரணம், பைத்தியம் முதலியவைகளை சத்துருவுக்கு அளித்தல் முதலிய சில நீச காரியங்களைச்செய்யக்கூடிய சில மந்திரம் ஔஷதி (பச்சிலை) முதலியவைகளின் ஸித்திபலத்தை ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்துவதற்காக திருஷ்டாந்தமாக எடுத்துக்காட்டி அதன்மூலமாக அஹிம்ஸை, உண்மைபேசுதல், தானம், தயை முதலிய வைதிக தர்மகாரியங்களை கொஞ்சம் முதலில் எடுத்துக் கூறி, முடிவில் தமது வயிற்றுப்பிழைப்புக்குத்தகுதியாகவிருக்கும் அதர்மகாரியங்களை ஆதாவுடன் உபதேசஞ்செய்வதும், மிலேச்சர்களின் ஆசாரத்தையும் துலுக்கர்கள் பிராமணர்கள் முதலிய வெவ்வேறு ஜாதியர்களின் ஸமபக்தி போஜனமென்னும் தீயச்செயலையுமெடுத்துக் கூறுவதுமாகிய நாஸ்திகஸ்மிருதிகளுக்குத் தான் வேதவிரோத மூலமாகவும், காம,குரோதம்என்னும் காரண மூலமாகவும் பிராமாண்யமில்லையென்பதேயொழிய, வைதிகமாய் இருக்கும் மனுஸ்மிருதி முதலியவற்றிற்குக் கிடையாது'' என்று. ஆதலால், வைதிகஸ்மிருதிகளுக்குக் காமக் குரோதங்கள் காரணமாகாதென்பது நிச்சயம்.

(8-E) தவிர ஸ்மிருதிகளுக்கு காம க்ரோதம் முதலிய காரண விசேஷங்களைக் கல்பனை செய்யும்பக்ஷத்தில் அவைகளை ஸ்மிருதியாக ஒப்புக்கொள்ள முடியாது. ஸர்வக்ஞர்களாகிய மனு முதலிய மகரிஷிகளனைவரும் வேதாந்தத்தை உள்ளபடி உண்மையாக உணர்ந்து அவ்வர்த்தத்தையே நம்மைக் குறித்து வேறு சப்த விசேஷத்தால் ஸ்மரித்திருப்பதாகவல்லவா சாஸ்திரப் பிரஸித்தம். மனு கூறுவதாவது—"மஹரிஷிகள் வேதத்தை தபோமஹிமையால் முதலில் ஸாக்ஷாத்கரிப்பார்கள். அப்படியே ஸ்மிருதியாகவும் ஸ்மரிப்பார்கள். ஆகையால் வேதம், ஸ்மிருதி, இவ்விரண்டும் பிரமாணமேயாகும்'' என்று இவ்வாறு வேதப் பிரகாசிதமாயுள்ள

ஸ்மிருதிகளின் அர்த்தவிசேஷத்திற்கும் காமக்குரோதங்களை மூல காரணமாகக் கல்பனை செய்வதாயின் அத்தகைய ஸ்மிருதிகளி னின்றும் வெளியாகுமர்த்தம் அபூர்வமாகவே ஏற்பட்டு விடு மாதலால், அந்த அபூர்வமாகிய ஸ்மிருதி வாக்கியார்த்தத்தை வேதார்த்தானுபவ பூர்வகமாயுள்ள ஸ்மிருதி ரூபமாக மனு முத லிய மகரிஷிகள் கூறியிருப்பது விருத்தமாகுமன்றோ. வேதார்த் தத்தை வெளியிடும் மகரிஷிகளின் வசனமனைத்தும் பௌருஷே யமா (புருஷனுலுச்சரிக்கப்பட்டதா) னதுபற்றி, அதனர்த்தமும் கூட பௌருஷேயமென்றும், வேதார்த்தமற்றதென்றும் அபிநவ மென்றும் ஏற்படமாட்டாதல்லவா? வக்தாவினுடைய(சப்தத்தை உச்சரிப்பவனுடைய)வார்த்தையெல்லாம் பௌருஷேயமானதால் அதிலிருந்துவெளியாகும் அர்த்தமும்பௌருஷேயம்தான். வேதா ர்த்தமன்று என்று எவனொருவன் நினைக்கின்றானோ? அவன் பிரத் தியக்ஷ வேதத்தையுங் கூட வேதமில்லை என்றே நினைக்கக்கூடும். ஏனென்றால் வேதத்தை எடுத்துரைக்கும் தற்காலத்திய வைதிகர் களுடைய முகத்திலிருந்து வெளிப்படும் வைதிகசப்தமும் பௌரு ஷேயமா (புருஷனால் உச்சரிக்கப்படுவதால்) னதால் வேதமில்லை என்றல்லவா முடிந்துவிடும். இவ்விஷயம் தந்திரவார்த்திகத்திலும் ஸ்பஷ்டமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. அதாவது "மகரிஷி களின் ஸ்மிருதிவசனங்கள்யாவும் பௌருஷேயமானதால் அவை களின் அர்த்தம் வேதார்த்தமில்லையென்றால், தற்காலத்திய புரு ஷர்களால் வெளியில் பிரகாசப்படுத்தப்படும் வேதவாக்கியமுங் கூட ஸ்மிருதிகள்போலவே வேதரூபமாகவே ஸித்திக்கமுடியாது உச்சாரணத்தால் பிரகாசப்படுத்தப்படும் வேதவாக்கியத்திற்கும், ஸ்மிருதியால் பஹிரங்கமாய் வெளிப்படுத்தப்படும் வேதவசனத் திற்கும் சிறிதும் பேதமில்லையன்றோ? வேதத்தை உச்சரிக்காம லிருக்கும்போது ஸம்ஸ்கார (ஸூக்ஷ்ம) ரூபமாக வேதாத்யய னம் செய்பவர்களின் அந்தக்கரணத்தில் அவ்வேதம் தங்கியிருப் பதுபோலவே, வேதார்த்தத்தை ஸ்மிருதி ரூபமாக எழுதும் மக ரிஷிகளிடமும் ஸ்மிருதிக்ஞானரூபமாக அவ்வேதமனைத்தும்தங்கி நிற்கின்றது. ஆகவே மகரிஷிகளால் ஸ்மரிக்கப்படும் அர்த்த விசேஷத்தையுடைய வேதவாக்கியத்திற்கும் வேதாத்தியயனம் செய்யும் தற்காலத்திய வைதிகர்களால் படிக்கப்படும் வேதவாக் கியத்திற்கும் கொஞ்சங்கூட வித்தியாஸமில்லையென்றவிஷயத்தை

எவ்விதயுக்தியாலும் பாதித்து விடமுடியாது" என்று. அன்றியும் வேதமூலமாகவேற்பட்டிருக்கும் ஸ்மிருதிகளுக்கு பிரத்தியக்ஷ ஸித்தமாயிருக்கும் காமக்ரோதம் முதலியவைகளை மூலகாரணமாகக்கூறும் நாஸ்திகர்களால் ஸ்மிருதிகளுக்கு மூலமாய் இருக்கும் வேதார்த்தத்திலேயே ஹேதுவாதம் செய்யப்பட்டதாக ஏற்படுமேயன்றி வேறல்ல. இவ்வாறே மனுவும் ஸ்மிருதிகளுக்குப் பிரத்தியக்ஷஸித்தமாயுள்ள சிலகாரணங்களை மூலமாகக் கல்பனைசெய்து கொண்டு அவைகளை அவமதிப்பவன் வேதத்தையவமதித்தவனாகவேயாவான் என்று கூறியிருக்கின்றார். அதாவது— "எவனொருவன் வேதம் ஸ்மிருதி இவ்விரண்டையும் ஹேதுவாதத்தாலவமதிக்கின்றானோ? அவ்விதம் வேதநிந்தை செய்யும் நாஸ்திகனை, ஸாதுக்கள் பஹிஷ்காரஞ் செய்யவேண்டும்" என்று பகன்றுள்ளார். இம்மனுவசனத்திலிருக்கும் "தே" என்ற பதத்திற்கு சுருதி ஸ்மிருதிகளென்று பொருளாதலால் ஸ்மிருதிகளை அவமதிப்பவனும் சுருதிநிந்தை புரிந்தவனாகவே ஆவானென்ற விஷயம் மனுவுக்கும் ஸம்மதந்தானென்பது விளங்குகின்றது. இதனாலேயே யுக்திவிசாரஞ்செய்யும் ஸாமர்த்தியமற்று மூடச்சிரத்தையுள்ளவர்களே ஸ்மிருதிகளில் சொன்னபடி எல்லாமனுஷ்டிப்பார்களேயன்றி, மற்றவர்கள் அனுஷ்டிக்கமாட்டார்களென்ற மற்றொரு ஆக்ஷேபமும் விலகிவிட்டது. ஏனென்றால் யுக்திவிசாரத்தில் திறமைவாய்ந்தவர்களும் ஸூக்ஷ்ம திருஷ்டியுள்ளவர்களுமாகிய பண்டித சிரோமணிகளுங்கூட வைதிகஸ்மிருதிகளினின்றும் வெளியாகும் அர்த்தத்தை வேதார்த்தமாகவே நிச்சயமாகநினைத்துக்கொண்டு வேதவிஹிதமாயுள்ளகாரியங்களை அனுஷ்டிப்பதுபோல் ஸ்மிருதிவிஹிதகாரியங்களையும் சிரத்தையுடன் அனுஷ்டிக்கிறார்களல்லவா? இவ்விஷயத்தை உண்மையாக உணர்வதற்குங்கூடவிசாரசக்தியில்லாதவர்களும், ஸ்தூலதிருஷ்டியுள்ளவர்களும், ராகத்வேஷ பாவசர்களாகவுமுள்ள பாமரர்களுக்கு சக்தி சிறிதும் கிடையாது.

தவிர, பிரமாணக யாவராலும் விவாதமின்றி அங்கிகரிக்கப்பட்டிருக்கும் ஸ்மிருதி விதிவசனங்களுக்குக் காமக்குரோத முதலியவைகளை மூலகாரணமாக ஸம்சயப்படுவதுங்கூட வைதிகமார்க்கத்திலிருக்கும் மூவர்ணத்தாருக்குத் தகுதியில்லை. இவ்விதம் ஸ்மிருதிவிதிகளில் காமக்குரோதங்கள் முதலிய திருஷ்டகாரணங்களைக் கல்பனை செய்வதுபோலவே, மற்ற சுருதிவிதிகளிலுங்கூட

சிலதிருஷ்டகாரணங்களைக் கற்பிப்பது ஸுலபமானதால் சுருதி ஸ்மிருதிகளனைத்துமே நிஷ்பிரமாணமாக முடிந்துவிடும். ஸ்மிருதி விதிகள் தான் திருஷ்டகாரண மூலமாக ஏற்பட்டுள்ளது. சுருதி விதிகளில்லை என்பதற்கு யாதொரு யுக்தியுங் கூறமுடியாதல்லவா? எல்லாவிதிகளிலும் காரணவிசேஷத்தை மூலமாகக் கற்பிப்பது வெகு ஸுலபமாகுமன்றோ? அவ்வாறு எல்லாவிதிகளிலும் திருஷ்டகாரணகல்பனைசெய்வதாயிருக்கும் பக்ஷத்தில் சார்வாகமதத்தில் தான் பரியவஸானமேற்பட்டுவிடும். சார்வாக மதத்தினர்களல்லவா இவ்வாறு கூறுவார்கள். அவர்கள் சொல்வதாவது—"அக்நிஹோத்ரம் முதலிய வைதிக கர்மாக்களும் மூன்று வேதங்களும் மூன்று தண்டம் தரித்துக்கொண்டு ஸன்யாஸாச்ரமம்பெறுதலும் விபூதிதரித்தலும், மரணமடைந்தவர்களுக்கு உத்தரக்கிரியை, சிராத்தம் முதலியவற்றைச் செய்வதும், அறிவும் பௌருஷமுமற்ற மூடஜனங்களுக்கு ஜீவனோபாயமாக ஈச்வரனாலேற்படுத்தப்பட்டிருக்கின்றதேயன்றி பரலோக ஸுகத்திற்குஉபாயமாகவல்லவென்று". ஆகையால் மனுஸ்மிருதி முதலிய ஸ்மிருதிகளினர்த்தத்திற்குகாமக்குரோதம்முதலிய திருஷ்டகாரணங்களை மூலமாகக்கற்பனை செய்வது கற்பிப்பவர்களின் புத்திதோஷத்தால்தான்—அத்தகைய புத்திதோஷமானது ஒருவனிடம் உண்டாகுமேயானால் அக்கொடிய தோஷமானது அந்த புருஷனை சார்வாக மதமென்னும் பாழுங்குழியில் தான் தள்ளிவிடுமென்பது நிச்சயம்.

இவ்விஷயம் வெகு விஸ்தாரமாக தந்திரவார்த்திகக் கிரந்தத்தில் விரோதாதிகரணத்தில் பூர்வபக்ஷத்தைக் கூறுமிடத்தில் நிரூபணம் செய்யப்பட்டிருக்கின்றது. அதாவது—"ஆகையால் தற்காலத்தில் வேதாத்தியனம் செய்யும் வைதிகர்களால் படிக்கப்படுகின்ற வேதத்திற்குப் பிராமாண்யமிருப்பதுபோல் ஆதிகாலத்து மகரிஷிகளால் வெகு நியமத்துடன் படிக்கப்பட்டும் ஸ்மிருதிரூபகாரமாக வெளியிடப்பட்டுமிருக்கும். வேதத்திற்கும் அப்பிராமாண்யம் உண்டென்று நிச்சயமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அப்படி பிரமாணசிரோஷ்டமாக விளங்கும் வேதங்களின் அர்த்தத்தை உண்மையாக வுரைக்கும். ஸ்மிருதிகளுக்கும் அதன் மூலமாகப் பிராமாண்யம் ஸித்தித்துவிட்டது. மகரிஷிகளால் ராகத்வேஷம்முதலிய திருஷ்ட காரணத்தை முன்னிட்டுக்கொண்டும் ஸ்மிருதிகளெல்லாம் செய்யப்பட்டிருக்கலாமாதலால் ஸ்மிருதி

களைப் பிரமாணமாக ஒப்புக்கொள்வது சரியல்லவென்றால் தர்ம சாஸ்திரங்களுக்கு லோபம் முதலிய துர்க்குணங்களைக்காரணமாக எந்தப் பிரமாணத்தால் தெரிந்துகொள்ளப்பட்டது? ராகத்வேஷத்தை முன்னிட்டுக்கொண்டு ஸ்மிருதிகள் மகரிஷிகளால் செய்யப்பட்டதென்பதற்கு யாதொரு பிரமாணமுங் காட்டமுடியாது. யுக்திமூலமாக தர்மசாஸ்திரங்களுக்கு ராகத்வேஷம் முதலிய காரணவிசேஷம்கற்பிக்கப்பட்டதென்றால் ராகத்வேஷங் காரணம் என்ற கற்பனை சில ஸ்மிருதிவாக்கியங்களுக்கு மட்டிலுமா? அல்லது எல்லா ஸ்மிருதிகளுக்குமா? ஓரே தர்ம சாஸ்திரகிரந்தத்தில் சிலஸ்மிருதிவாக்கியங்களைப் பிரமாணமாகவும் சிலவற்றை அப்பிரமாணமாகவும்அங்கீகரிப்பது மிகவும் அநியாயமாமன்றோ? அங்ஙனமாயின் சிஷ்டர்களைவராலும் பிராமாணமாகக் கொள்ளப்படும் தோஷமற்ற அஷ்டகாதி ஸ்மிருதிகளுங்கூட அப்பிரமாணமாகவல்லவா முடிந்துவிடும். ஆகவே முதலாவது பக்ஷம் ஸரியல்ல. எல்லாஸ்மிருதிகளுக்குமென்ற இரண்டாவது பக்ஷமும் அஸங்கதமேயாகும். ஏனென்றால், இவ்விதம் ஸ்மிருதிகளுக்கெல்லாம் அப்பிராமாண்யத்தை ஸ்தாபிக்கக்கூடிய ராகம்,துவேஷம்,கர்வம், பைத்தியம், அஜாக்கிரதை, சோம்பல், லோபம் இவைமுதலிய காரணங்களை எந்தவிடத்தில்தான் உத்ப்ரேக்ஷைசெய்யமுடியாது, எல்லாவிடத்திலும் அப்பிராமாண்யத்தை இத்தகைய துஷ்டகாரணங்களைக்கொண்டு கற்பிப்பது வெகு ஸுலபமாவதுபோலவே பிராமாண்யத்தையும் சில காரணங்களைக்கொண்டு மனுமுதலிய மகரிஷிகளிடத்தில் ராகத்துவேஷம் முதலிய துர்க்குணங்களில்லையென்ற உத்தமபாவனையுடைய உத்தமபுருஷர்கள் கற்பனை செய்துவிடலாமன்றோ? புத்திதோஷத்தால் அல்லவா? மனு முதலிய மஹான்களிடத்தில் துஷ்டகுணங்களைக் கற்பிப்பதும் அதன் மூலமாக அவர்களின் வசனத்திலும் அப்பிராமாண்யத்தை ஆரோபிப்பதும் தற்காலத்தியவர்களுக்கு ஸ்வபாவமாயுள்ளது. அத்தகைய புத்திதோஷமில்லாதவர்களுஞ் சிலரிருக்கலாமன்றோ? அவர்கள் ஸ்மிருதிகளுக்குப் பிராமாண்யத்தையும் அங்கீகரிக்கலாமன்றோ? தமது யுக்திப்பிரமாணத்தால் கற்பிக்கப்பட்ட காரணவிசேஷத்தால் ஸ்மிருதிகளுக்கு யாவராலுமங்கீகரிக்கப்பட்டு அப்பிராமாண்யத்தை மறைத்துவிடும்பக்ஷத்தில் வேதவாக்கியமெல்லாவற்றிற்குங்கூட பிராமாண்யமில்லை என்று ஒப்புக்கொள்ளும்படி நேர்ந்துவிடும்.